**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 166/மா/2025

நாள் 04.03.2026

P. மூர்த்தி,
திருப்பூர் மாவட்டம். --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
ஈரோடு மாநகராட்சி. --- எதிர் மனுதாரர்

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், சோமனூர் வழி, இச்சிப்பட்டி அஞ்சல், தேவராயன்பாளையம், கதவு எண் 1/88 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P.மூர்த்தி என்பவரின் 24.04.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 28.04.2025 அன்று பெறப்பட்டு 166/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், சோமனூர் வழி, இச்சிப்பட்டி அஞ்சல், தேவராயன்பாளையம், கதவு எண் 1/88 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P.மூர்த்தி என்பவர் தனது 24.04.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி, மண்டலம் 1–ன் ஆள்வரைக்குள் வருகிற குமிளம்பரப்பு கிராமம், க.ச.எண்.160/1Aல் உள்ள ஸ்ரீசாய் நகர் மனைப்பிரிவில் சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் அனுமதியற்ற கட்டுமானங்கள் உருவாகி வருவது குறித்து உயர்திரு. ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடம் 08.04.2023 அன்று புகார் செய்து, மேற்கண்ட ஸ்ரீ சாய் நகர் மனைப்பிரிவில் உருவாகி வரும் அனுமதியற்ற சட்டவிரோத கட்டுமானங்கள் மீது, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அரசாணை நிலை எண் 07, நாள் 10.01.2023–ன்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை வைத்த போதும், மேற்கண்ட புகார் மனு மீது மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் யாதொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத காரணத்தால்,

உயர்திரு முதன்மைச் செயலர் (MAWS) சென்னை, நகராட்சிகள் நிர்வாக இயக்குநர், சென்னை, மாவட்ட ஆட்சியர் ஈரோடு ஆகிய அரசின் உயரிய அமைப்புகளுக்கு 03.08.2024–ல் புகார் மனுக்கள் அனுப்பப்பட்டும், நாளது தேதி வரை மேற்கண்ட ஸ்ரீ சாய் நகர் மனைப்பிரிவிலுள்ள அனுமதியற்ற சட்டவிரோத கட்டுமானங்கள் மீது, எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாமல், கடந்த இரண்டாண்டுகளாக நடவடிக்கை மேற்கொள்ளாமல் மெத்தனப் போக்குடனும், அலட்சியமாகவும் செயல்பட்டு உள்ளாட்சி அமைப்பிற்கு (ஈரோடு மாநகராட்சி) பெருமளவு வருவாய் இழப்பினை ஏற்படுத்தியும், ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டும், தங்களை வளப்படுத்திக் கொண்டும், வசதி வாய்ப்புகளோடு வலம் வந்து

கொண்டிருக்கும் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் உள்ளிட்ட மாநகராட்சி அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், நடுவம் தக்கதென கருதும் இன்னபிற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும், பணிந்து வேண்டுகிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 23.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஈரோடு மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் தனது 02.02.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

❖ மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள குமிளம்பரப்பு கிராமம் ரீ.ச. எண் 160/1A–ல் அமைந்துள்ள ஸ்ரீசாய் நகர் என்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலர் (DTCP) ஈரோடு மாவட்டம், சித்தோடு புது நகர் வளர்ச்சி குழுமம் அவர்களின் உத்திரவு ந.க. எண் 2919/2020–ன்படி திட்ட அனுமதி எண் 05/2021 என எண்ணிடப்பட்டு 12.08.2021 ஆம் தேதியன்று மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

❖ மேற்படி மனைப்பிரிவில் 51 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

❖ மேற்படி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டதன் பேரிலும் ஈரோடு மாநகராட்சி மூலம் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ந.க. எண் இ1/92/2021 நாள் 16.08.2021–ல் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

❖ மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள 51 மனைகளும் குடியிருப்பு மனைகளே ஆகும். இதில் 51 மனைகளில் 13 மனைகள் மட்டுமே குடியிருப்பு கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. எஞ்சிய மனைகள் அனைத்தும் காலிமனைகளாக நாளது தேதி வரை உள்ளது. பொதுமக்கள் குடும்பத்துடன் வசிக்கும் குடியிருப்பு கட்டுமானங்கள் மட்டுமே கட்டப்பட்டுள்ளது. அதன் புகைப்படங்கள் ஆணையத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

❖ மேற்படி மனைப்பிரிவில் நாளது தேதி வரை 13 குடியிருப்பு கட்டுமானங்கள் செய்யப்பட்டுள்ளன. இதில் 6 கட்டுமானங்களுக்கு உரிய கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் நகல்கள் ஆணையத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6 கட்டுமானங்களுக்கு கட்டிட அனுமதி பெறப்படாதது, கள ஆய்வில் கண்டறியப்பட்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் 1998–ம் வருடத்திய சட்டப் பிரிவு 135 (2) மற்றும் 134–ன் கீழ் அறிவிப்பு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ஒரு கட்டுமானம் துவக்க நிலையிலேயே உள்ளது.

❖ மேலும் இம்மனைப்பிரிவில் தொழிற்சாலை மற்றும் வணிக உபயோக கட்டுமானங்கள் ஏதும் இல்லை. 1500 சதுர அடி அளவிற்கு உட்பட்ட கட்டுமானங்களே அமைந்துள்ளன.

❖ இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள 5 கட்டுமானங்களுக்கு ஈரோடு மாநகராட்சி மூலம் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு சொத்துவரி நிர்ணயம் செய்யப்படும் போது அனுமதியை விட கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிட பரப்பளவிற்கும் அபராதத்துடன் வரிவிதிப்பு செய்யப்படுவதால் இதில் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லை.

❖ சொத்துவரி இரசீது நகல்கள் ஆணையத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 03.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1ல் அமைந்துள்ள குமிளம்பரப்பு கிராமம், க.ச.எண்.160/1Aல் உள்ள ஸ்ரீசாய் நகர் மனைப்பிரிவிற்கு, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் செயல்முறைகளில் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை 17ல் குறிப்பிட்டுள்ளபடி ஸ்ரீசாய் மனைப்பிரிவிற்கு (உள்ளாட்சியிடம்) ஈரோடு மாநகராட்சியிடம் மனைப்பிரிவு வரைபட ஒப்புதல் பெறவேண்டும், ஆனால் நாளது தேதிவரை மேற்கண்ட மனைப்பிரிவிக்கு ஒப்புதல் பெறப்படவில்லை.

ஸ்ரீசாய் நகர் மனைப்பிரிவில் 13 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் 6 வீடுகளுக்கு ஈரோடு மாநகராட்சியின் அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளது. இன்றைய விசாரணையில் ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1–ல் உதவிப்பெறியாளர் மேற்கண்ட 6 அனுமதியற்ற கட்டிடங்களுக்கு வழங்கப்பட்ட தாக்கீதுகளை என்னிடம் காண்பித்தார்.

மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடங்களுக்கு 2024முதல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் நான் இம்முறை மன்ற நடுவத்திற்கு மனு அளித்தப்பின் 2 வருடங்கள் கழித்து தற்போது தான் நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

எனவே, விதிகளுக்கு புறம்பாக கட்டப்பட்ட 6 கட்டிடங்களின் மீது உரிய அமலாக்க நடவடிக்கையாக Lock & Seal தாக்கீதுகள் வழங்கி உரிய நடவடிக்கை எடுக்க ஈரோடு மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

6. எதிர்மனுதாரர் தரப்பில் ஈரோடு மாநகராட்சி உதவிப் பொறியாளர் (திட்டம்) 03.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள குமிளம்பரப்பு கிராமம் ச.எண் 160/1Aல் அமைந்துள்ள ஸ்ரீசாய் நகர் என்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலர் (DTCP) ஈரோடு மாவட்டம் சித்தோடு புதுநகர் வளர்ச்சி குழுமம் திட்ட அனுமதி எண் 06/2021 ல் 51 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனைபிரிவிற்கு 12.8.2021 அன்று தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு 16.08.2021ல் இறுதி ஒப்புதல் ஈரோடு மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட 51 மனைகளில் 13 மனைகள் மட்டுமே குடும்பத்துடன் வசிக்கும் குடியிருப்பு கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளது. எஞ்சிய மனைகள் அனைத்தும் காலிமனைகளாக உள்ளது.

இவை 1500 சதுர அடி அளவிற்கு உட்பட்ட கட்டுமானங்களே அமைந்துள்ளன. இந்த 13 குடியிருப்பு கட்டுமானங்களில் 6 கட்டுமானங்களுக்கு மட்டுமே உரிய கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 6 கட்டுமானங்களுக்கு கட்டிட அனுமதி பெறப்படவில்லை என்பது கள ஆய்வில் கண்டறியப்பட்டதால், சம்மந்தப்பட்ட வீடு உரிமையாளர்களுக்கு 10.01.2024ல் Notice for production of documents வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையாக திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் 1998ம் வருடத்திய சட்டப்பிரிவு 132 (2) மற்றும் 134 ன் கீழ் 23.01.2026 நாளிட்ட தாக்கீதுகள்

வழங்கப்பட்டுள்ளன. ஆனால் ஒரு கட்டுமானம் முழுமை அடையவில்லை. தாக்கீதுகளின் நகல்களை இம்முறை மன்றத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

மேற்கண்ட அனுமதியற்ற கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு உரிய சட்டப்பூர்வமான அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''.

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான ஈரோடு மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் அதனுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் உதவிப்பொறியாளரின் (திட்டம்) வாக்குமூலம் மற்றும் அதனுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி, மண்டலம் 1–ல் அமைந்துள்ள குமிளம்பரப்பு கிராமம், க.ச.எண்.160/Aல் உள்ள ஸ்ரீசாய் நகர் மனைப்பிரிவில் அனுமதியற்ற கட்டுமானங்கள் கட்டப்பட்டு வருகிறது என்பதும், அம்மனைப்பிரிவிற்கு, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் செயல்முறைகளில் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை எண் 17ல் குறிப்பிட்டுள்ளபடி ஸ்ரீசாய் மனைப்பிரிவிற்கு ஈரோடு மாநகராட்சியிடம் மனைப்பிரிவு வரைபட ஒப்புதல் பெறவேண்டும் என்பதும், ஆனால் மேற்கண்ட மனைப்பிரிவில் கட்டப்பட்டுள்ள 13 வீடுகளில், 6 வீடுகள் வரைபட அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளது என்பதும், 03.02.2026 நடைபெற்ற விசாரணையின் போது ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1–ல் உதவிப்பெறியாளர் மேற்கண்ட 6 அனுமதியற்ற கட்டிடங்களுக்கு வழங்கப்பட்ட தாக்கீதுகள் காண்பிக்கப்பட்டது என்பதும், விதிகளுக்கு புறம்பாக கட்டப்பட்ட 6 கட்டிடங்களின் மீது உரிய அமலாக்க நடவடிக்கையாக Lock & Seal தாக்கீதுகள் வழங்கி உரிய நடவடிக்கை எடுக்க ஈரோடு மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள குமிளம்பரப்பு கிராமம் ச.எண் 160/1Aல் அமைந்துள்ள ஸ்ரீசாய் நகர் என்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலர் (DTCP) ஈரோடு மாவட்டம் சித்தோடு புதுநகர் வளர்ச்சி குழுமம் திட்ட அனுமதி எண் 06/2021 ல் 51 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும், இம்மனைபிரிவிற்கு 12.8.2021 அன்று தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு 16.08.2021ல் இறுதி ஒப்புதல் ஈரோடு மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது என்பதும், 51 மனைகளில் 13 மனைகள் மட்டுமே குடும்பத்துடன் வசிக்கும் குடியிருப்பு கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளது என்பதும், எஞ்சிய மனைகள் அனைத்தும் காலிமனைகளாக உள்ளது என்பதும், கட்டப்பட்ட 13 குடியிருப்பு கட்டுமானங்களில், 6 குடியிருப்பு கட்டுமானங்கள் மட்டுமே உரிய கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதும், இவை 1500 சதுர அடி அளவிற்கு உட்பட்ட கட்டுமானங்களே அமைந்துள்ளன என்பதும், கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்ட 6 கட்டுமானங்கள் கள ஆய்வில் கண்டறிப்பட்டதால், சம்மந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு Notice for production of documents வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையாக திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் 1998ம் வருடத்திய சட்டப்பிரிவு 132 (2) மற்றும் 134 ன் கீழ் 23.01.2026 நாளிட்ட தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளன என்பதும், ஆனால் ஒரு கட்டுமானம் முழுமை அடையவில்லை என்பதும், மேற்கண்ட அனுமதியற்ற கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு உரிய சட்டப்பூர்வமான அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் ஈரோடு மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை, உதவிப் பொறியாளரின் (திட்டம்) வாக்குமூலம் மற்றும் அத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட தாக்கீதுகளின் நகல்கள் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், ஈரோடு மாநகராட்சி, மண்டலம் 1—ல் குமிளம்பரப்பு கிராமம், க.ச.எண்.160/1Aல் உள்ள ஸ்ரீசாய் நகர் மனைப்பிரிவில் கட்டப்பட்ட கட்டிடங்கள் கட்டிட திட்ட அனுமதி பெறாததால், திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 1998 பிரிவு 132 (2) மற்றும் 134ன் கீழ் 23.01.2026 நாளிட்ட தாக்கீதுகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையாக உரிய சட்டப்பூர்வமான அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஈரோடு மாநகராட்சி உதவிப் பொறியாளர் (திட்டம்) தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மேற்கண்ட அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 1998—ன்படி உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஈரோடு மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026—ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04—ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. P. மூர்த்தி,
கதவு எண் 1/88,
தேவராயன்பாளையம்,
இச்சிப்பட்டி அஞ்சல், சோமனூர் வழி,
பல்லடம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம்—641 668.

(2) ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு—638 001.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ./உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

5/3/26
செயலாளர்.